

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (9.5.2025) திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் நடந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்தினாலும், பாகிஸ்தான் இராணுவத்தின் குண்டு வீச்சினாலும் இறந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், இந்திய இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவரும் அமைதியாக ஒரு நிமிடம் எழுந்து நின்று வீர வணக்கம் செலுத்தினார்கள்.

### ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும்

# 52 தமிழ்நாட்டு மாணவர்களை அழைத்து வர ஏற்பாடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

சென்னை, மே 11-

ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் தீவிரவாத தாக்குதலால், தற்போது, இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிலவி வரும் சூழலில் ஜம்முகாஷ்மீரில் படித்துவரும் தமிழ்நாட்டு மாணவர்கள் குறித்து - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

கடந்த 22.4.2025அன்று ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்கு சென்றிருந்த பொது மக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலர் பாதிக்கப் பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக அவர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டு, அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப்பட்டு, 01124193300 (Landline), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அமைக்கப்பட்டு, அவர்களின் தேவைகள் அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது.

இந்த நிலையில், தற்போது, தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர்ச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், ஜம்முகாஷ்மீரில் படித்துவரும் தமிழ்நாட்டைச் சார்ந்த 52 மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்துவர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்துள்ளார்கள்.

இந்த வேண்டுகோளுக்கு இணங்க, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஆகியோர் அம்மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தொடர்ந்து பேசி, தமிழ்நாட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் தற்போது விமானச் சேவைகள் முற்றிலும் முடக்கி வைக்கப் பட்டுள்ள காரணத்தினாலும், அவர்களை சாலை வழியாக பாதுகாப்பாக அழைத்துவருவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தினாலும், தற்போதைய நிலைமை சீரானவுடன் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும் 52 தமிழ்நாட்டு மாணவர்களை மீண்டும் தமிழ்நாட்டிற்கு அழைத்துவருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### சிவகிரி இரட்டைக் கொலை விவகாரம்!

# ஈரோடு மாவட்டம் எல்.பி.பி. வாய்க்கால் அருகே 1660 இடங்களில் சோதனைச் சாவடிகள்!

### அமைச்சர் க. முத்துசாமி தகவல்!

ஈரோடு, மே.11 -

ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே நடந்த இரட்டை கொலை விவகாரத்தில் பிஏபி, எல்பிபி வாய்க்கால் அருகே 1660 இடங்களில் சோதனை சாவடிகள் அமைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறினார்.



ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே உள்ள விளக்கேத்தி மேக்கரையான் தோட்டத்தில் விவசாயி ராமசாமி அவர் மனைவி பாக்கியம் ஆகியோர் தனியாக வசித்து வந்த நிலையில் மர்ம நபர்களால் கொலை செய்து பாக்கியம்மாள் அணிந்திருந்த 11 பவுன் தங்க நகை மற்றும் ரொக்கம் ஒரு லட்சம் ரூபாயை கொள்ளையடித்து சென்றனர்.

சிவகிரி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து மேலும் பத்து தனிப்படை அமைத்து குற்றவாளிகளை தேடி வருகின்றனர்.படுகொலை செய்யப்பட்ட விவசாயிக் குடும்பத்தினருக்கு அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பலமுறை காவல்துறையினரிடம் பேசி தேவையான உறுதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். காவல்துறையினர் ஏற்கனவே குற்றவாளிகளாக உள்ளவர்கள், சந்தேகப்படும் நபர்கள் உள்ளிட்ட அனைவரையும் கண்காணித்து வருகின்றனர்.

ஈரோடு திருப்பூர் பகுதியில் உள்ள சிசிடிவி கேமராக்களையும் 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள டெலிபோன் டவர்களையும் காவல்துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர். பிஏபி. எல்பிபி வாய்க்கால் அருகே பல்வேறு இடங்களிலும் வீடுகளிலும், வீடுகளுக்கு வெளியில் இருந்து வரும் நபர்களையும் கண்காணித்து வருகின்றனர்.

இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வாய்க்காலில் தப்பிச்செல்ல வாய்ப்புள்ளது இரண்டு வாய்க்கால்களில் 1660 இடங்களில் சோதனை சாவடிகள் அமைப்பது குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மேலும் ஈரோட்டில் 552 இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

வாய்க்கால் கரையில் மது அருந்துவது, சீட்டு விளையாடுவது மற்றும் கேளிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டால் காவல்துறையினர் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் என அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறினார்.

அதுபோது கே.இ. பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார்எம்.எல்.ஏ., எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மு.சுப்ரமணியம், சு.குணசேகரன் விஜயகுமார், நடராஜன், வி.செல்வராஜ் ராஜசேகர், பிரதீபா கோபிநாத், சந்திரசேகர், கோவிந்தசாமி, விஸ்வ நாதன் கோபால், ஏ.டி.அரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மன்னார்குடி நகர சார்பில் நகர செயலாளர் வீரா.கணேசன் ஏற்பாட்டில் நடைபெற்ற சாதனை விளக்க பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக பேச்சாளர் வேளாங்கண்ணி பொன்னிவளவன் மற்றும் நிர்வாகிகள் பேசினர்.




தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆலோசனையின்படி நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியம் இண்டூர் பேருந்து நிலையம் அருகே ஒன்றிய கழக செயலாளர் வைகுந்தம் தலைமையில், இராஜகோபால் வரவேற்புரையில் நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தடங்கம் பெ. சுப்ரமணி,தலைமைக் கழக பேச்சாளர்கள் ஓசூர் ஏ.எஸ்.அப்துல்ரகுமான்,டி.ஏ.ரவி, ஆகியோர் கழக ஆட்சியின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் அவைத்தலைவர் செல்வராஜ், ஆர்.பி.செந்தில்குமார், ரேணுகாதேவி, என்.பி.பெரியண்ணன், ஏலகிரி.நட்ராஜ், எச்சனஹள்ளி. சண்முகம், அசோக்குமார், வேலு, சித்தன் சாந்திகுமரன்,கிருஷ்ணன், தங்கராஜ், செல்லபெருமாள், கன்னியப்பன், சின்னசாமி உள்ளிட்ட கழகத்தினர், ஏராளமான் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# திருச்செங்கோடு வடக்கு - திருச்செங்கோடு தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் திருச்செங்கோடு கிழக்கு - திருச்செங்கோடு மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - ஒன்றிய, நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் – அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட, **திருச்செங்கோடு ஒன்றியம், திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு;

திருச்செங்கோடு நகரம் **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் - **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் அமையும்.

**திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்:** 1. டி.கைலாசம்பாளையம், 2.டி.புதுப்பாளையம், 3. சித்தாளந்தூர், 4. தேவனாங்குறிச்சி, 5.கருமாபுரம், 6. திருமங்கலம், 7. கருவேப்பம்பட்டி, 8. புதுபுளியம்பட்டி, 9. ஒ.இராஜாபாளையம், 10. தோக்கவாடி, 11. டி.கவுண்டம்பாளையம், 12.வரகூராம்பட்டி, 13. வட்டூர் ஆகிய 13 ஊராட்சிகள்.

**திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்:** 1. ஆண்டிபாளையம், 2. அனிமூர், 3. சிறுமொளசி, 4. ஏ.இறையமங்கலம், 5. எஸ்.இறையமங்கலம், 6. பிரிதி, 7. ஏமப்பள்ளி, 8. மொளசி, 9. சிக்கநாய்க்கன்பாளையம், 10. பட்லூர், ஆகிய 10 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : ஜி.தங்கவேல், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

**திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : தாமரைச்செல்வன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**திருச்செங்கோடு கிழக்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15, 16, 25, 26, 27, 32, 33 ஆகிய 17 வார்டுகள்.

**திருச்செங்கோடு மேற்கு நகரம் :** 7, 8, 9, 10, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 28, 29, 30, 31 ஆகிய 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருச்செங்கோடு கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : டி. கார்த்திகேயன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**திருச்செங்கோடு மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : ஆர். நடேசன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம்**

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் ‘முரசொலி’யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **ஆனங்கூர், தண்ணீர் பந்தல்பாளையம், மோடமங்கலம் ஆகிய 3 ஊராட்சிகள் பள்ளிபாளையம் மத்திய ஒன்றியத்தில்** செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 09.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### “நாடுபோற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு”

# திருவாரூர் மாவட்டத்தில் இரண்டாம்கட்ட பொதுக்கூட்டங்கள்!

### பொதுக்கூட்ட மேடையில் கழகத்தில் இணைந்த அ.தி.மு.க. குடும்பங்கள்!

திருவாரூர், மே.11 -

திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படியும் தலைமைக் கழக அறிவிப்பின் படியும், “நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு”இரண்டாம் கட்ட பொதுக்கூட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் எழுச்சியோடு நடைபெற்றது.

கழக அரசின் சாதனைகளை போற்றும் விதமாக பொதுக்கூட்ட மேடையிலேயே மாவட்ட செயலாளர் பூண்டி கே கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலை யில் அதிமுக உள்ளிட்ட மாற்றுக் கட்சியில்இருந்து 25குடும்பங்கள் கழகத்தில் இணைந்தனர்.

மன்னார்குடி கிழக்கு ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.செல்வம் , தலைமை கழக பேச்சாளர் சோம. இளங்கோவன், இளம் பேச்சாளர் தினேஷ்பாபு மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர். திராவிட நாயகர் அவர்களின் பொற்கால அரசின் சாதனையை போற்றும்விதமாக அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளில் இருந்து விலகிய 25 குடும்பங்கள் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் முன்னிலை யில் பொதுக்கூட்ட மேடையிலேயே கழகத்தில் இணைந்தனர்.

மன்னார்குடி நகர கழகம் சார்பில் நகர செயலாளர் வீரா.கணேசன் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் மன்னார்குடி பந்தலடியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் , கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜ மாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், தலைமைக் கழக பேச்சாளர் கவிஞர் தே.வேளாங்கண்ணி பொன்னிவளவன் பங்கேற்று பேசினர்.


கோட்டூர் தெற்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் பெருகவாழ்ந்தானில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமை கழக பேச்சாளர் வே.இராசமாணிக்கம், இளம் பேச்சாளர் ஜெ.விக்னேஸ்வரி மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

நன்னிலம் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வாழ்க்கை கடைவீதியில் ஒன்றிய செயலாளர் வே.மனோகரன் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக் கூட்டத்தில், ஒன்றிய செயலாளர் கேப்டன்.செல்வராஜ், தலைமைக்கழக பேச்சாளர் வே.விக்ரமன், இளம் பேச்சாளர் அ.தீன்ஷாநூப் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

இந்த கூட்டங்களில் பங்கேற்ற மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக அரசின் பொற்கால சாதனைகளை விளக்கி பேசியதுடன் ,கழக அரசின் சாதனைப் பட்டியல்கள் அடங்கிய புத்தகத்தை பொதுமக்களிடம் வழங்கினார். மேலும் கூட்டங்களில் மாநில , மாவட்ட , ஒன்றிய ,நகர மற்றும் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கதிரிபுரத்தில் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட கரும்பு விவசாய அங்கத்தினர்களின் கரும்பு நடவு வயல்களை சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 09.05.2025 அன்று கள ஆய்வு செய்து, விவசாயிகளுடன் கலந்துரையாடினார்கள். உடன்ரெ.சதீஸ் டி.அன்பழகன்.ஆ.மணி, கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர். பிரியா, முனைவர்.பி. பழனியப்பன், தடங்கம்.பெ.சுப்பிரமணி, திருமதி.வேடம்மாள், அரூர் வருவாய் கோட்டாட்சியர் சின்னுசாமி, அரூர் பேரூராட்சி தலைவர் திருமதி.இந்திராணி தனபால் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளனர்.



மன்னார்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற “நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் பல்லாண்டு” பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் அதிமுக உள்ளிட்ட கட்சிகளில் இருந்து விலகிய 25 குடும்பங்கள் தங்களை பொதுக்கூட்ட மேடையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம், தலைமைக்கழக பேச்சாளர்கள் சோம.இளங்கோவன், ஜெ.தினேஷ்பாபு மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர் .